செ. கு. எண்: 160 நாள்:19.08.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் அறிக்கை - 19.8.2020**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், ஆலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி அனிதா என்பவரின் கணவர் திரு. சரவணக்குமார் என்பவர் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது, எதிர்பாராதவிதமாக மரம் சாய்ந்து விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. காவேரி என்பவரது மகன் திரு. மாரியப்பன் என்பவர் மரத்தில் ஏறி கிளைகளை வெட்டும் போது, தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் வட்டம், வ.உ.சி கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜாகீர் உசேன் என்பவரின் மகன் செல்வன் ரியாஸ் என்பவர் தேநீர் வியாபாரத்தின் போது மாடியிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட சம்பவங்களில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**